**மாந்தை மேற்கு பிரதேச சபை**

**மன்னார் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 மார்ச் 29 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 21 இல் சபையின் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து மாந்தை மேற்கு பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இணக்கம் காணப்படாத வேறுபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட அரசிறைக் கடனாளிகள் மற்றும் திரண்ட நிதி ஒதுக்கம் என்பனவற்றிற்கான மீளாய்வாண்டிற்கான ஆரம்ப நிலுவைகள் நேர் முன்னைய ஆண்டிற்கான இறுதி நிலுவைகளுடன் இணங்காமையினால் ரூபா 7,593,497 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் நீதிமன்றத் தண்டப் பணம் வருமதியாக ரூபா 3,953,504 ஆகக் காட்டப்பட்ட போதிலும் வருமான பதிவேட்டின் பிரகாரம் ரூபா 4,709,421 ஆகக் காட்டப்பட்டிருந்தமை தொடர்பில் ரூபா 755,917 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் பதவியினர் கடன் மீதி ரூபா 6,783,954 ஆகக் காட்டப்பட்ட போதிலும் கடன் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 6,782,130 ஆகக் காட்டப்பட்டமையால் ரூபா 1,824 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

**பெறவேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டிற்கான அரசிறைக் கடனாளிகள் நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,872,004 இனை அறவீடு செய்வதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணங்காமை

**சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி (ரூபா) | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிர்வாக ஒழுங்கு விதிகள் விதி 178(3) | - | திறமையான ஒப்பந்த வேலைகளைச் செய்கின்ற சமூகமட்ட அமைப்புக்கள், சனசமூக நிலையங்களின் பெயர்ப் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் | | |
| நிதி ஒழுங்குவிதி 571 | 592,449 | இரு வருடங்களிற்கு மேற்பட்ட காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பில் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் ரூபா 2,063,607 தொகையான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடும் போது ரூபா 4,764,589 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2017<br>------<br>மதிப்பிடப்பட்ட வருமானம்<br>ரூபா | பட்டியலிடப்பட்ட வருமானம்<br>ரூபா | சேகரிப்பட்ட வருமானம்<br>ரூபா | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள்<br>ரூபா | 2016<br>------<br>மதிப்பிடப்பட்ட வருமானம்<br>ரூபா | பட்டியலிடப்பட்ட வருமானம்<br>ரூபா | சேகரிப்பட்ட வருமானம்<br>ரூபா | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள்<br>ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (i) | வாடகைகள் | 8,623,000 | - | 8,077,925 | 460,743 | 7,022,000 | - | 8,921,915 | 502,320 |
| (ii) | உரிமங்கள் | 597,250 | - | 710,640 | - | 503,500 | - | 1,874,720 | - |
| (iii) | ஏனைய வருமானங்கள் | 10,801,139 | - | 11,429,909 | 15,042,020 | 11,179,849 | - | 15,651,868 | 16,738,006 |

### 2.2.2 அனுமதிக் கட்டணங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் பெறப்பட்டன.

(அ) அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களினால் நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்ட 131 வீடுகளிற்குரிய நிர்மாண அனுமதிப்பத்திரக் கட்டணங்களினை அறவிடுவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராமையினால் சபைக்கு கூட்டுமொத்தம் ரூபா 785,400 வருமான இழப்பு ஏற்பட்டிருந்தது.

(ஆ) சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கடந்த 01 தொடக்கம் 06 ஆண்டுகள் வரையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கூட்டுமொத்தம் 6,569 வதிவிட வீடுகள் வருமானப் பரிசோதகர்களினால் முறையாக பரிசோதனை செய்யப்பட்டிருக்காமையினால் சபைக்கு கிடைக்க வேண்டிய பரிசோதனைக் கட்டணங்கள் கூட்டுமொத்தம் ரூபா 14,080,200 வருமானத்தினைப் பெற சபை தவறியிருந்தது.

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 4,709,421 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 2,746,755 தொகையான முத்திரைக் கட்டணங்கள் தொடர்ந்தும் பெறப்பட வேண்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் பெறப்பட்டன.

#### (அ) திண்மக்கழிவு முகாமைத்துவம்

சபையின் எல்லைப்பரப்பிலிருந்து அகற்றப்படுகின்ற குப்பை கூளங்களை எரித்தல் மற்றும் புதைத்தல் செயற்பாடுகள் மட்டுமே சபையால் மேற்கொள்ளப்பட்டிருந்தனவேயன்றி கொம்பொஸ்ட் மற்றும் மீள் சுழற்சி செயற்திட்டங்களைக் கொண்ட திண்மக்கழிவு முகாமைத்துவத்தைச் செயற்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை அடையத்தவறியமை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டில் அலுவலர்களிற்கான பயிற்சியளித்தலுக்காக சபை நிதியில் கூட்டுமொத்தம் ரூபா 50,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அத்தகைய பயிற்சியளித்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) வருமானம் குறைந்த நலிவுற்ற தாய்சேய் என்போரினது போசாக்கினை வளப்படுத்தி ஆரோக்கியமான தாய்சேய் நலனைப் பேணுவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கைவிடப்பட்ட செயற்றிட்டங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் வரவு செலவுத் திட்டத்தில் சபை நிதி மூலம் செயற்படுத்த திட்டமிடப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 6.7 மில்லியன் பெறுமதியான 11 மூலதன மற்றும் நலத்திட்டங்கள் முற்றாகக் கைவிடப்பட்டிருந்தன.

(ஆ) சபையினால் நேர் முன்னைய ஆண்டில் திட்டமிடப்பட்டு நடைமுறைப் படுத்தப்படாதிருந்த கூட்டுமொத்தம் ரூபா 3.95 மில்லியன் பெறுமதியான 06 மூலதன வேலைகள் மீளாய்வாண்டிலும் முற்றாக செயற்படுத்தப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 மனிதவளங்கள் முகாமைத்துவம்**

சபையினது 09 ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிராமையால் அத்தகையவர்களால் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைகள் பாதிப்படைந்திருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது.

**3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

மீளாய்வாண்டில் சபையினால் பயன்படுத்தப்பட்ட பெக்கோலோடரிற்க்கு கூட்டுமொத்தம் ரூபா 56,211 பெறுமதியான 591 லீற்றர் டீசல் எரிபொருளானது சோர்வாக காணப்பட்டமை தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

சபையின் நடவடிக்கைகளை கணக்காய்வு செய்து வினைத்திறனான முறையிலும் அதன் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குமான உள்ளகக் கணக்காய்வு அலகொன்று உருவாக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த உள்ளகக் கணக்குப் பரிசோதனை நடவடிக்கைகள் கணக்காய்வுக்கு கிடைத்திருக்கவில்லை.

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டுக்கும் உண்மைக்குமிடையிலான செலவின வேறுபாடு ரூபா 2.2 மில்லியன் பாதகமாகக் காணப்படுகின்றது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

.

| | முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- | --- |
| (அ) | வருமானங்கள் | ஆதனங்களின் பெறுமதிகள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு ஆதனவரி அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | சொத்துக்கள் | சபைக்கு சொந்தமான காணி கட்டடங்கள், வீதிகள், சேமக்காலைகள் மற்றும் விலங்கு அறுமனைகள் போன்றவற்றின் உரிமைப் பத்திரங்களை ஆவணப்படுத்தத் தவறியமை. |
| (இ) | கணக்கீடு | பொதுப் பேரேடு மற்றும் பிரதான பேரேடுகளை நாளதுவரைப்படுத்தி பராமரிக்கத் தவறியமை. |